மலிவான வைபவங்களுக்கு ஏற்ற வீட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

பக்கங்கள் நான்கு

பொதுச் செய்தி
யாழ்ப்பாணம்
தமிழர் தேசியநாளேடு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

★ ஜவுளிவகை
★ ரெடிமேட் வெளாரிகள்
★ டயிலர் மெற் பீக் வெளாரிகள்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டுச்சேலை
70, 71A, சிறப்பு அங்காடி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 17 வெள்ளிக்கிழமை (02 - 09 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 279

அரசின் சமாதான முயற்சிகளுக்கு படைத் தளபதிகள் ஒத்துழைப்பு

மேலும் சில பொருள்கள் மீதான தடையை நீக்கவும் வலியுறுத்து

கொழும்பு, செப்டெம்பர் 2

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண புதிய அரசு எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு தங்களின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என்று இராணுவத் தளபதிகள் நேற்று பிரதமர் சந்திரிகாவுக்கு உறுதியளித்தனர்.

முப்படைகளின் தளபதிகள் மற்றும் படை உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட உயர்நிலை மாநாட்டில் வைத்து இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையில் இருந்து இன்னும் பல பொருள்களை நீக்கவேண்டும் என இராணுவத் தளபதிகள் இம் மாநாட்டில் தெரிவித்தனர்.

சுமார் 4 மணித்தியாலங்கள் வரையில் இம்மாநாடு நீடித்தது.

கடந்த நான்கு ஆண்டுகளாக வடக்கு - கிழக்கு யுத்தகளத்தில் பணிபுரியும் தளபதிகளுடன் நேரடியாக அரசியல் தலைவர்கள் எவ்விதத் தொடர்பையும் கடந்த காலத்தில் வைத்துக் கொள்ளவில்லை என்று மாநாட்டில் கலந்து கொண்ட தளபதிகள் தெரிவித்தனர்.

புதிய அரசு பதவிக்கு வந்தவுடன் அரசியல் தலைவர்களுடன் நெருங்கமாகக் கலந்துரையாடி கருத்துப்பரிமாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது குறித்து பெரு மகிழ்ச்சி அடைவதாகவும் படைத்தளபதிகள் தெரிவித்தனர்.

இது போன்ற கலந்துரையாடல்கள் தொடரும் என்றும் —

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் படையினரின் நிலை மனதை நேரிற் கண்டறிவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சுச் செயலாளர் பதவி நீக்கப்பட்டார்

கொழும்பு, செப். 2

வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் பொது வசதிகள் அமைச்சுக் செயலாளர் டபிள்யு. டி. அவிஸ் பெருமா நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதற்கான உத்தரவை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பிறப்பித்தார்.

தகுதியான ஒருவரை தெரிந்தெடுக்கும் வரை திரு அவிஸ் பெருமா செயலாளராக தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்பட்டார் என்றும்—

நாளை பிரதமரின் இணக்கத்துடன் திரு கே. ஏ.

(4 ஆம் பக்கம் பார்க்க)

தொண்டமான் சுதந்திரமாக எந்த முடிவையும் எடுக்கலாம்

ஐ. தே. க. பொதுச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, செப்: 2

"இ. தொ. கா. தலைவர் என்றரீதியில் திரு. எஸ். தொண்டமான் சுதந்திரமாக எந்தவொரு முடிவையும் எடுக்கலாம். அரசையும் ஆதரிக்கலாம். அதற்காக அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எதையும் ஐ. தே. கவினால் எடுக்க முடியாது.

இப்படிக் கூறினார் ஐ.தே.க பொதுச் செயலாளர் காமினி விஜயசேகரா.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஆனால் தொண்டமான் கட்சி மாறினால், நாடாளுமன்றத்துக்கான விகிதாசாரப்படி எம். பி. பதவியை அவர் இழக்க நேரிடும். அவர் ஐ. தே. க. தேசியப் பட்டியல் மூலம் எம்.பியானதே அதற்குக்காரணம் என்றும் அவர் கூறினார். (ஒ-9-3)

சந்திரசேகரன் உட்பட 24 பிரதி அமைச்சர்கள்

கொழும்பு, செப். 2

நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பிரதி அமைச்சர்கள் 24 பேரின் விவரம் வருமாறு:

★ பி பி ஜி. தலுவல்லை — வெளிநாட்டு வர்த்தகம், நீதி, அரசமைப்பு

★ டி. பி. விக்கிரமசிங்க — வெளியுறவு

★ சமரவீர விரவன்னி — காணி, விவசாயம், வனவளம்

★ அத்தாவுட செனவிரத்ன — பொதுநிர்வாகம், நாடாளுமன்ற அலுவல்கள், பெருந்தோட்டத் தொழில்

★ மொன்சிரி சோமவிரவ — தொழில், தொழிற்பயிற்சி

★ மஹிந்த விஜேசேகர — கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு

★ கமேத பி ஜயசேன — பௌத்த சாசனம்

★ ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே — நிதி, திட்டமிடல், இளைஞர் தேசிய நல்லிணக்கம்

★ சந்திமித்ர எக்கநாயக்கா — போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், கற்றாடல், மாவீர் விவகாரம்

★ எம். எஸ். ஏ. எம். ஹில்புல்லா — தபால், தொலைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிளாம்பயரில் தபால் பொதிகள் செல்லவில்லை

வடமராட்சி, செப். 2

வாரந்தம் பருத்தித்துறைக்கு வரும் "பிளாம்பயர்" கப்பலிற்தபால் பொதிகள் வெளியூர்களுக்கான தபால்கள் ஏற்றிச் செல்லப்படுவது வழக்கமாக இருந்தபோதும்—

நேற்று வருத்தித்துறைக்கு வந்த "பிளாம்பயர்" கப்பலிற்தபால் பொதிகள் ஏற்றிச் செல்லப்படவில்லை.

கடந்த வாரம் அனுப்பப்பட்ட தபால் பொதிகளை காங்கேசன் துறையில் வைத்து கடற்படையினர் உடைத்து கடும் சோதனை நடத்தியதாலேயே இவ்வாரம் தபால் பொதிகள் ஏற்றிச் செல்லப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-173)

ரகசிய உடன்பாடு ஏதும் புலிகளுடன் செய்யவில்லை

படை அதிகாரிகள் மத்தியில் சந்திரிகா தகவல்

கொழும்பு, செப். 2

விடுதலைப் புலிகளுடன் இரகசிய உடன்பாடு எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நேற்று தெரிவித்தார்.

முப்படைகளின் தளபதிகள் மற்றும் படை உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்துக்குத் தீர்வுகாணும் எவ்விதமான நடவடிக்கையிலும் படையினர் பூரணமாக ஈடுபடுத்தப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-3)

புலிகளின் கருத்தை அறிந்த பின்னரே யுத்த நிறுத்தம்

கொழும்பு, செப். 2

யுத்த நிறுத்தம் மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகளின் கருத்தை அறிவதற்காக காத்திருப்பது என்று நேற்று கொழும்பில் நடந்த படை அதிகாரிகளின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

முப்படைத் தளபதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் யுத்த நிறுத்தம் தொடர்பாக படை அதிகாரிகளின் கருத்தை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க கேட்டறிந்தாகவும்

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனான பொறுத்தே யுத்த நிறுத்தம் செய்வது பற்றி ஆராயப்படும் என்று பிரதமர் தெரிவித்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

காவல் வைரவன் விடுதலை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் பற்றியும் இம் மாநாட்டில் ஆராயப்பட்டதாகவு தெரிவிக்கப்பட்டது (இ-எ-3-6)

யுத்த டாங்கிகள் மீண்டும் திருமலைக்கு

கொழும்பு, செப். 2

அண்மையில் பலாலிக்கு அனுப்பிவைக்கப்பட்ட யுத்த டாங்கிகள் மற்றும் யுத்த உபகரணங்கள் மீண்டும் அங்கிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றன என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

இரண்டு யுத்த டாங்கிகள் கப்பல் மூலம் பலாலியில் இருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன

ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட யுத்த டாங்கிகள் மற்றும் யுத்த உபகரணங்கள் குறித்து புதிய அரசு விசாரணை நடத்த உள்ள சமயம் இவை எடுத்துச் செல்லப்படுவதால் இவை ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டவையாகவே இருக்கும் என கருதப்படுகிறது (இ-3)

சர்வதேச செய்தியாளர்கள் இங்கு படை எடுக்கின்றனர்

கொழும்பு, செப். 3

சர்வதேச செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள் யாழ்ப்பாணத்துக்குப் படை எடுக்க ஆரம்பித்துள்ளனர்

ரோய்ட்டர் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த டேவிட் மக் டொனால்ட், "ரோய்ட்டர்" கொழும்புப் பிரதிநிதி வர்ண கருணாநிலா, றொகான் குணசேகரா ஆகியோர் நேற்று விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

லண்டன் இலஸ்ரேட்டர் ஊடக நிறுவனச் செய்தியாளர் ஒருவர் இன்று யாழ்ப்பாணம் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த மேலும் பலர் அடுத்த சில வாரங்களில் இங்கு வரவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-173)

சீனி, பால்மா வகைகளின் விலையும் குறைக்கப்படும்

வர்த்தக அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப். 2

சீனி மற்றும் பாலமா வகைகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அடுத்த சில வாரங்களில் குறைக்கப்படும்.

வர்த்தக, வாணிப, உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்தினா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாடு எவையும் தாம் கொண்டுவரப் போவதில்லை என்றும்—

வர்த்தக சந்தையில் போட்டா போட்டியை அதிகரிப்பதன் மூலம் பொருள்களின் விலைகளை குறைக்க முயற்சி எடுத்துவருகோம் என்றும்—அவர் தெரிவித்தார். (ஒ-3)

சுதந்திரக் கட்சியை சேர்ந்தோர் 18 பேர்

புதிதாக நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்ட 24 பிரதி அமைச்சர்களில் 18பேர் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

ஜி. ஜி. பே. முன்னணியின் லலித் பிரியுக்கு இரண்டு பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய சமசமாஜக் கட்சி, மக்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையகக் கட்சி முன்னணி ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொரு பிரதி அமைச்சர் பதவி கொடுத்துள்ளது. (இ-எ-6)

எனது நல்லெண்ணத்தை வெளிக்காட்டி விட்டேன்

பொருளாதாரதடை தளர்வு குறித்து பிரதமர்

கொழும்பு, செப். 2

"இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் நோக்கத்தின் அடிப்படையில் எனது நல்லெண்ணத்தை வெளிக்காட்டிவிட்டேன். பிரபாகரனும் அவரது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கிறேன்."

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை தளர்த்தும் அரசின் முடிவை அறிவிக்கும் வகையில் பிரதமர் நேற்று முன்தினம் கூட்டிய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் மேற்கொள்ளப் படவிருக்கும் பல வழிவகைகளில் முதற்கட்டமே இந்த பொருளாதாரத் தடைத் தளர்வு என்றும் சந்திரிகா கூறினார்.

வடக்கில் உள்ள பிரச்சினைக்கு கூடிய விரைவில் அரசியல் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையையும் அவர் இந்த மாநாட்டில் வெளியிட்டார். (இ-3)

தடைசெய்த பிரதேசத்தில் வாகனங்களை செலுத்தாதீர்!

யாழ்ப்பாணம், செப். 2

கனமழை விடுவிடாமல் வரும் வேளை—நல்லூர் கற்றாடல் பகுதியில் பேக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்ட பிரதேசங்களில் — வாகனங்களைச் செலுத்த வேண்டாம் என அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மாநகர சபை கூரைதாரர வைத்திட அதிகாரி பணிமனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

தடை செய்யப்பட்ட பகுதிகளுக்கு அனுமதிப் பத்திரம் பெற்றவர்களும், அனுமதிப் பத்திரம் பெறாதவர்களும் வாகனங்களுடன் உட்செல்வது அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த நடவடிக்கைகளால் பக்த அடியார்கள் கோயிலுக்குள் வரவதுடன் விபத்துக்களும், உயிர் ஆபத்துக்களும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகும் எனக் கருதப்படுகின்றது.

எனவே தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்கு வாகனங்களை ஓட்டிச் செல்வதைக் கவனமாக வீதிவலம் வரும் சமயத்தில் வாகனங்களைக் கொண்டு செல்ல வேண்டாமெனத் தயவுடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். (ஒ)

உரிய நேரத்தில் யாழ். செல்வார்

கொழும்பு, செப். 2

"யாழ்ப்பாணத்துக்கு உரிய வேளையில், உரிய முறையில் போவேன்"

மேற்கண்டவாறு பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்:

நேற்று முன்தினம் கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

"பிரபாகரனின் நேரடி விருப்பத்தையே விருப்புறேன். இடையில் உள்ளோர்க் அறிவிப்பை ஏற்று செயற்படுவது சிரமம்.

புலிகளின் குரல் வானொலியில் தமிழ்ச்செல்வன், புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என்று அறிவித்திருக்கிறார், யுத்த நிறுத்தத்தை அவர்கள் விரும்புகிறார்கள் — என்றார்.

வடபகுதி முகாம்களுக்கு பிரதமர் இவ்வாரம் விஜயம்

கொழும்பு, செப். 2

பிரதமர் பதவி ஏற்ற பின் முதல் நடவடிக்கையாக சந்திரிகா குமாரணதுங்கா இவ்வார இறுதியில் வடக்கில் உள்ள வடபகுதி முகாம்களுக்கு விஜயம் செய்ய உள்ளார் என கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

முதல் இராணுவ [illegible] நடத்திய பின்னரே இந்த விஜயம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

யாழ் நூல் நிலையம் எரிப்பு விசாரிக்க கமிஷன் நியமிக்குக

பிரதமரிடம் ந.ச.ச. கட்சி கோரிக்கை

கொழும்பு, செப். 2

தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து இனங்களுக்கும் ஒரு பெரிய சொத்தாக திகழ்ந்த யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்டது குறித்து விசாரிக்க தகுதி நிறைவான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

நவசமசமாஜக் கட்சி பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு யாழ். பொது நூல் நிலையம் எரிக்கப்பட்டது.

அந்த நூலகத்தை எரித்தது குறித்து ஆராய இதுவரை குழு ஒன்று நியமிக்கப்படவில்லை. ஆகவே இதனைவிரைவில் உடனடியாக ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும்— என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

வதிரி உக்கிளாங்கொல்லை அர்மன் கோயிற் குழவிக், அரசடிப் பாடசாலை, நெல்லியடி பட்டினசபை, நூலகங்களுக்குகாமையாக வதிரி-நிக்கம் பிரதான வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர் மானிக்கப்படும். எத்தேரமும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: ஆறுமுகம் பேக்கரி, வதிரி, கரவெட்டி. (32653)

பிறிமா புறொயிலர் இறைச்சிக்கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. (மலிவம் உடுவில் மாளிர் கல்லூரிக்கு முன் விநியூடாக) கிங்கம் லேன், உடுவில். (32660)

சேவல் விற்பனைக்கு

தடுப்பு ஊசி ஏற்றப்பட்ட ஒரு மாதம் வளர்சி அடைந்த பிறவுன், கறப்பு சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. மகிவாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32644)

விற்பனையாகின்றது

ஜுனியர் விகடன் (பல நிறங்களிலும் தரங்கள்) ஞானபூமி ஆண்டு மலர், ராணி, விகடன், கோகிலம், சோதிட ஆய்வு நிறுவனத்தின் ஒரே பார்வையில் திருமணப் பொருத்த விதிகள். (M. N. மகேந்திரராஜா) O/L கணிதம் I and II (திருமதி ச. ம. கமலநாதன்) ஸ்ரீவாந்தி புத்தகசாலை, யாழ்ப்பாணம் நல்லூர். தலைமை மக்கள் புத்தகசாலை. (சி-8678)

மணிக்கூடு திருத்துதல்

சுவர மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக்கொடுக்கப்படும். உதிர்ப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்ப அட்டையுடன் வரவும் சுவர மணிக்கூடு பற்றறிகளுமுண்டு. சஜன்ஸ் வாச் வேர்க்ஸ், 18, புகையிரத நிலைய வீதி, கல்வாசம் சந்திக்கருகில். (7621)

தவறிவிட்டது

30-8-1994 அன்று மல்லாகத்துக்கும் கல்வாசத்திற்கும் இடையில் பவுன் கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து C/o 35, உதயன் 82, கே. கே. எஸ். வீதி, கல்வாசம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 7622)

1-9-94 அன்று 9-00 மணியளவில் மருதனார்மடத்திலிருந்து யாழ்ப்பாணம் மினிபஸ்ஸில் பிரயாணம் செய்கையில் அடையாள அட்டையுடன் மண்ணிறப் பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். திருமதி மோகனா கந்தரமூர்த்தி, துர்க்கா தேவஸ்தான அலுவலகம், இராமநாதன் கல்லூரி, கல்வாசம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (32669)

காணாமற் போய்விட்டது

எனது மூக்குக் கண்ணாடி 19-08 94-ம் திகதி கொண்டமனாறு செல்வச்சந்நிதியில் காணாமற் போய்விட்டது. இதை எடுத்தவர்கள் தயவு செய்து செல்வச்சந்நிதியில் அலுவலகத்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒப்படைக்கும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். தவமணி பத்மமேனி. (7739

"சக்திப் பானை"

வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம் "சக்தி" பயிர்களுக்கு உரமூட்டி அன்றாட தேவைக்கு சத்துள்ள நீங்கற்ற காய், கனிவகை தருவது "சக்தி" கூட்டெரு முறையிலான இயற்கைப் பசளை. கிலோ பக்கற் ஒன்று ரூபா 10/- நல்லூரில் எமது காட்சிச்சாலையிலும் கிடைக்கிறது. "மிக்கவைத்" (சி-8972)

காணவில்லை

கப்பிரமணியம் முனியாண்டி அடையாள இல. 562353437V முனியாண்டி மீனாம்மா அடையாள இல. 637202600 X 23-8-94 தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் மேற் முகவரியில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும் 58A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7740)

கலை வர்த்தக கல்லூரி
C. C. A.

374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

A/L 94

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புக்கள் (Day Class) ஆரம்பம்.

எமது ஆசிரியர் குழு

பொருளியல் — திரு. தயன்
கணக்கியல் — திரு ஸ்ரீ
வர்த்தகம் — பிரபல ஆசிரியர்
நுளவையியல் — திரு. சயந்தன்
தமிழ் — திரு. கணேஷ்
புவியியல் — திரு. வேலா
இந்து நாகரிகம் / இந்து சமயம் — திரு. ஜோதீஸ்வரன்
அரசியல் — திரு. பஞ்சு
கிறிஸ்தவம் — திரு. நோபேட்
நாடகமும் அரங்கியலும் — திரு. திலகநாதன்

ஆரம்பம்:- 10 - 09 - 1994 சனி

குறிப்பு
(1) வாரத்தில் 4 மணித்தியாலம் வகுப்புக்கள் நடைபெறும்.
(2) மாணவர்கள் முந்தைய பதிவினை மேற்கொண்டு அனுமதியை பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி

(சி / 9006)

FRAGRANT MEMORIES



REV. L. N. HITCHCOCK

AT REST: 02 – 09 – 1993

In thankful ness to god
For your life and work.

Devoted Children
Treasured Grand Children,
Affectionate Great Grand Children,
Loving Sisters and Brother,
Loved Ones.

"Rajasthan",
Manipay South. (7736)

31ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்:		விண்ணில்:
17		03
08		08
1931		1994

இறப்பியேற்பிள்ளை இம்மானுவேல்

(காங்கேசன்துறை சிலோந்து கூட்டுத்தாபன முன்னாள் நேரக்கணிப்பாளர்)

எமக்காக எம்முடன் வாழ்ந்து, எம்மை வாழவைத்த தெய்வமே! உம்மை எந்நாளும் மறவோம்.

இவரின் ஆன்ம இளைப்பாறுதிக்காக துன்னாலை வடக்கு சதாசுகாய மாதா ஆலயத்தில் இன்று (02-09-94) வெள்ளி காலை 7-00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியிலும், அன்று மதியம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் தவிப்போர்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தந்தை, சகோதரர்கள், மைத்துனர்கள், உறவினர்கள்.

டலோனி தெற்கு,
புலோலி. (7738)

அருள்மிகு
வண்ணை ஸ்ரீ பேச்சியம்பாள்
தேவஸ்தானம்
மகாகும்பாபிடேக மண்டலாபிஷேக
பூர்த்தியும்
50 நாட்கள் இடம்பெற்ற
மகாபாரத விரிவுரை
பூர்த்தி விழாவும் பாராட்டு வைபவமும்
விரிவுரை நிகழ்த்தியவர்:
தமிழருவி த. சிவகுமாரன்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம் ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

தலைவர்:
திரு. ந. நாகராசா
(தலைவர், தேவஸ்தான அறங்காவலர் சபை)

காலம்: 02 – 09 – 1994 வெள்ளி
இரவு 8மணி

மேற்படி மகா கும்பாபிடேக மண்டலாபிஷேக கிரியைகளை நெறிப்படுத்திய
பிரம்மஸ்ரீ நீ. சுப்பிரமணியக் குருக்களை
பாராட்டுதல்
(பொன்னாடை போர்த்துதலும், பொற்பதக்கம் அணிவித்தலும்)

மகாபாரத விரிவுரையை
50 தினங்கள்
மண்டலாபிடேக காலத்தில் சிறப்புற நிகழ்த்தி பலரினதும் அன்பையும் பாராட்டையும் பெற்ற
தமிழருவி த. சிவகுமாரன்
அவர்களைக் கௌரவித்தல்
(பொன்னாடை போர்த்துதலும், பொற்பதக்கம் சூட்டலும்)

பாராட்டுபவர்கள்:
வாகீச கலாநிதி கனக. நாகேஸ்வரன் M. A.
(பரம்பரை அறங்காவலர், நயினை அம்மன் தேவஸ்தானம்)
வித்துவான் வ. கந்தையா
திரு. க. சோமசுந்தரம்
(ஓய்வு பெற்ற, இ. போ. ச. உத்தியோகத்தர்)

கௌரவிப்பவர்:
செல்வன் க. கிருபாகரன்
(தேவஸ்தான அறங்காவலர் சபை பொருளாளர்)

நன்றியுரை:
செல்வன் த. டிபதாசன் (கண்ணன்)
(தேவஸ்தான அறங்காவலர் சபை செயலர்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அறங்காவலர் சபை.

அனுபவிப்பு:
சுந்தரம் ஸ்ரோர்ஸ்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
கணேசா கஞ்சியம்
59, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

(சி-8971)

தவறாது
நல்லூருக்கு
வாருங்கள்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன
கண்காட்சியைப் பாருங்கள்
பரிசுப் போட்டி ஒன்று காத்திருக்கிறது!
உங்களுக்கு
பெறுமதி மிக்க பரிசுகள்
கிடைக்கும்!
போட்டி விவரங்கள்
கண்காட்சி வாசலில்

தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்

(சி-8974)

SPOKEN ENGLISH
with
GRAMMAR
திரு. K V. தாசன்

★ மிக ஆரம்ப அறிவுடன் ஆரம்பிக்கப்பட்டு, இலக்கணத் தெளிவுடன் சரளமாகப் பேசப் பயிற்சி.
★ அரச, தனியார் நிறுவனங்களிற் பணிபுரியவர்களுக்குமான நேர அட்டவணை.
★ வகுப்பில் 35 மாணவர்கள் மட்டும்.

சனி
ஞாயிறு | பி. ப. 4-00

ஆரம்பம்: 3-9-94

BOND கல்வி நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(7730)

இரண்டாவது பிறந்த தின வாழ்த்து
02 — 09 - 1994

செல்வி துஷியந்தி

நெல்லியடி, கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவலிங்கம் – அமுதமலர் தம்பதியரின் செல்வப் புதல்வி துஷியந்தி தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (02 – 09 – 1994) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

துஷியந்தியை அப்பா, அம்மா, அண்ணா பரிசன், அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியன்றி சித்தி, அத்தை, மாமா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, சின்னக்கிள், பிரான்சில் இருந்து பெரிய அங்கிள், அத்தை, நவம் அப்பப்பா குடும்பம், இரத்தினம் அம்மம்மா குடும்பம், ஜேர்மனியில் இருந்து தருமு அப்பப்பா குடும்பம், தெய்வேந்திரம் பெரியப்பா, குணாளன் சித்தப்பா குடும்பம், லண்டன் மாமா, சுவிற்சிலிருந்து குகா அங்கிள், மோகன் அங்கிள், நாதன் அங்கிள், இராசன் அங்கிள், தேவன் மச்சான், சுவிஸிலிருந்து குலம் மாமா, அவுஸ்ரேலியாவில் இருந்து யஜி சித்தப்பா தாயன்மார்கட்டு அம்மம்மா குடும்பம், மச்சான்மார், மச்சாண்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அப்பப்பாமார், அம்மம்மாமார், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரும் ஸ்ரீ கல்லிபுர ஆஞ்சனேயர் அருளால் பல்கலையும் கற்று, சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (32671)

திரு. திருமதி நாகராசா
மணமக்களின்
திருமண வரவேற்பு உபசார அழைப்பு

அன்புடையீர்!

31 – 08 – 1994 அன்று நிறைவுபெற்ற திருமணத்தைத் தொடர்ந்து 03 - 09 - 1994 சனிக்கிழமை மாலை 3:00 மணி முதல் 7-00 மணி வரை 'அன்னை இல்லம்' தயாவி தெற்கு, மானிப்பாயில் (St. Peter's தேவாலய அருகில்) நடைபெறவுள்ள வரவேற்பு உபசார வைபவத்தில் உறவினர்களையும், நண்பர்களையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு. A. V. பரமலிங்கம்
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

திருமதி ந. சின்னப்பு
சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய். (32562)

தெழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படும்
நல்லூர் கண்காட்சிச் சாலையில்

அன்னா தொழிலக தயாரிப்பான அன்னா கோப்பி, கோசமா, இட்லிமா, ஜீவாகாரம் இலவசமாக வாங்கி உடனுக்குடன் உற்பத்திக்கான ஊக்குவிப்பு தொடுருபா 300/- பெறுமதியான உற்பத்திப் பொருள்களை வாங்குபவர்களுக்கு முருகன் திருவுருவப்படம், ஜீவாகாரம் சேவை பாக் இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

அன்னா தொழிலகம்
இணுவில்.

(சி-9015)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கணக்கியல்
A/L 96 புதிய பிரிவு
ஆரம்பம்: **03 - 09 - 1994**
சனி 2 - 30 மணி

A/L 95
WEEKEND CLASS சனி ஞாயிறு 12-30 — 2 - 30
EVENING CLASS செவ். வியா. 4 — 6

By:
S. K. பிரபாகரன்

★ உடன் அனுமதிகளைப் பெறவும்

(சி/9009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் வெளிநூலகம்
உடுவில்

2 தமிழன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தளர்த்தப்பட்ட பொருளாதாரத் தடை

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை தளர்த்துவதற்கு பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான அரசு முடிவு செய்திருக்கிறது.

புதிய அரசு எடுத்திருக்கும் முடிவை வடபகுதித் தமிழர்கள் வரவேற்பார்கள் என்பது உண்மையே. ஆனால் தனது இந்த முடிவின் மூலம் வடக்குத் தமிழருக்கு சந்திரிகா அரசு ஏதோ கொட்டிக் கொடுத்து விட்டது என்று யாரும் கூறமுடியாது.

தமக்கு உரியதை— தங்களுக்கு கிடைக்க உரிமையுடையதை— அதுவும் அவற்றில் ஒருபகுதியைப் பெறுவதற்கு தமிழருக்கு வாய்ப்புக் கிட்டியிருக்கிறது: அவ்வளவே.

யுத்தத்தினால், யுத்தகாலத்தினால் தேவைப்படாத இந்தப் பொருள்களை வடபகுதி மக்களுக்கு கிடைக்காமல் செய்வதற்காக முன்னைய அரசு தடை உத்தரவை விதித்தது. இந்தத் தடையின் மூலம் விடுதலை வேண்டிப் போராடும் மக்களின் மனஉறுதியை உடைக்கலாம் என்று பகல் கனவு கண்டது அந்த அரசு.

வடக்கு மக்களுக்குத் தேவையான அன்றாட அவசியப் பொருள்களை அவர்களுக்கு கிடைக்காமல் செய்து— அவர்களது அடிப்படை உரிமைகளை மறுத்து— அவர்களை வாடக்க நினைத்த பழைய அரசு போன பின்னர், புதிதாக வந்த அரசு, அந்த அடிப்படை உரிமைகளில் ஒருகூறினை மட்டும் வழங்க முடிவு செய்திருக்கிறது.

மேலும் விளக்கிக் கூறவதானால் சமூகத் தமிழர்களுக்கு உரியதான — அவர்களுக்குச் சொந்தமான — அடிப்படை உரிமைகள் பலவற்றை அடாவடித்தனம் மூலம் பறித்து வைத்திருந்த சிங்கள அரசு அவற்றில் சிலவற்றை மட்டும் விட்டுக்கொடுக்க முன்வந்திருக்கிறது.

எமக்கு உரியதில் ஒருபகுதியைத்தான் நாம் பெற்றிருக்கிறோமே தவிர, எமக்கு ஏதோ புதிதாகத் தன்னுடைய ஒன்றை சிங்கள அரசு தந்து விடவில்லை. ஏனவே சந்திரிகா அரசு புதிதாக வாரி வழங்கியிருப்பதாக யாரும் நினைத்துவிடக்கூடாது.

தடை நீக்கும் ஏனைய 14 பொருள்களையும் உபயோகிப்பதற்கு எமக்கு உரிமை உண்டு. ஆனால் அவற்றை நாம் பெறுவதற்கு புதிய அரசு அனுமதிக்கப் போவதில்லை; அவற்றின் மீதான தடை தொடரப்போவதாக புதிய அரசு தெரிவித்திருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளில்படி—

தமது குன்றாட அத்தியவசியப் பொருள்களை பெற்றுக் கொள்வதில் தெரிவு உள்ள பிரஜைக்கு வழங்கப்பட்ட உரிமையை வடக்கில் உள்ள பிரஜைக்கு வழங்காமல் விடமுடியாது.

எனினும் அவசரகாலச் சட்டம் போன்ற விசேட ஏற்பாட்டின் கீழ் இத்தகைய உரிமைகளைப் பறிக்கும் விதிகளை அமுல் செய்ய முடியும்.

ஆனால் பொருத்தேர்தல் முடிந்த கையோடு ஜனாதிபதி பிறப்பித்த அவசரகாலச் சட்டத்தை காலாவதியாக விட புதிய அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் எந்தச் சட்டத்தின் கீழ் மேற்படி பொருள்கள் மீதான தடையை அரசு அமுல் செய்யப்போகிறது?

அவசரகாலச் சட்டம் காலாவதியானதுடன் — அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட — மேற்படி பொருளாதாரத் தடை தொடர்பான விதிகளும் காலாவதியாகி விடும்.

முன்னைய அரசு அவசரகாலவிதி காலாவதியான பின்னர்—அரசமைப்புக்கு முரணாக தனது பைலாக்கள் மூலம் பொருளாதாரத் தடையை அமுல் செய்தது: நீர்வேலி மறுவினத்துக்குப் பின்னர் புதிய அரசும் மேற்படி 14 பொருள்கள் விடயத்திலும் சட்டத்துக்கு மாறான இந்தப் போக்கைத்தான் கடைப்பிடிக்கப் போகிறது?

வழிபாட்டுத் தலப் பகுதிகளிலிருந்து இராணுவ முகாம்களை அகற்றுக

சந்திரிகாவுக்கு இந்துசமயப் பேரவை கடிதம்

யாழ்ப்பாணம், செப். 2

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு விடுத்திருக்கும் அழைப்பை ஏற்று, யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்து பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்கும்படி பிரதமர் சந்திரிகாவை யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை கோரியுள்ளது.

பிரதமருக்கு ஒகஸ்ட் 31 திகதியிடப்பட்டு அனுப்பிய கடிதம் ஒன்றின்மூலம் பேரவை இவ்வேண்டுகோளைச் சமர்ப்பித்துள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடந்துவரும் கொடூர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு நீங்கள் எடுத்திருக்கும் முடிவை வரவேற்கிறோம்.

வடபகுதித் தமிழ் மக்களுக்குத் தாங்கொணாத் துன்பங்களை ஏற்படுத்தியுள்ள கனிவளங்களை, தாமிரமலமற்ற பொருளாதார பொருளாதாரத் தடைகளை எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடியாக நீக்கும்படி நாம் கேட்டுக்கொள்கிறோம்.

பல்லின மக்களும் பல்வேறு சமயத்தவர்களும் வாழும் இந்த நாட்டில் பௌத்த சமயத்துக்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் ஏனைய சமயங்களுக்கும் ஆதரவளிக்க வேண்டும் என்று தாங்கள் தெரிவித்துள்ள கருத்தை நாம் முழுமனதாக வரவேற்கிறோம்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தினால் இந்த நாகடு இந்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

வடக்கு - கிழக்கில் மாத்திரம் ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டும், சேதப்படுத்தப்பட்டும் மாசுபடுத்தப்பட்டும் உள்ளன. மேலும் நூற்றுக்கணக்கான கோயில்களில் பூசைகள் நடைபெறுவதில்லை.

வரலாற்றுப் பெருமைமிக்க மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம், உருத்திரபுரம் முருகன் கோயில், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆகியவற்றில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால், அந்த பூசைகள் தடைப்பட்டுள்ளதுடன், இந்துக்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டுள்ளது.

எல்லா இந்துக்களுக்கும் பொதுவான கிரிகைகளை புனித தீர்த்தத்துக்கு சென்று இந்துக்கள் தங்கள் கடன்களை நிறைவேற்ற முடியாதுள்ளார். கோயில்கள் குண்டு வீசித் தாக்கப்படுகின்றன. வடபகுதி மீதான பொருளாதாரத் தடையினால் பூசைத் திரவியங்களைக் கூட கொண்டுவர முடியாத சூழ்நிலை உள்ளது. சேதப்படுத்தப்பட்ட கோயில்களைத் திருத்த முடியாதுள்ளது.

அழிக்கப்பட்ட கோயில்களைப் புனர்நிர்மாணஞ்செய்யுமாறும், இராணுவம் நிலைகொண்டுள்ள புனித வழிபாட்டுத் தலப்பகுதிகளில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றி அங்கு பூசைகள் நடைபெறவும் மக்கள் சென்று வழிபடவும்ஏற்றசூழ்நிலையை ஏற்படுத்துமாறும் நாம் கடந்த அரசுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு செவிசாய்க்கப்படவில்லை.

இந்துக்கள் மீதான இக்கெடுபிடியை நீக்குவதுடன், பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களைப் புனர்நிர்மாணஞ் செய்து பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் இந்துக்கள் சுதந்திரமாகவும் வழிபாடு செய்ய ஏற்ற ஒழுங்குகளைச் செய்யும்படி கோருகின்றோம். இப்பணிகளைத் துணிவுடன் மேற்கொள்ள வேண்டிய ஆத்மீக பலத்தை எல்லாம் வல்ல எம் பொருமான் தங்களுக்கு அருள்வாராக

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-எ)

தமிழீழத்தை தெரிந்து கொள்ளுங்கள் வினாவிடைப் போட்டி

அரை இறுதிக்கு 6 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், செப்: 3

தமிழீழ பொருளியல் மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினராக நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு நடத்தப்படும் தமிழீழத்தை தெரிந்து கொள்ளுங்கள் எனும் வினாவிடைப் போட்டியின் முதல் சுற்றிலிருந்து அரையர் அரையிறுதி போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

6 சுற்றுக்களாக தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கடந்த 28ஆம்திகதி நல்லூரில் விசேடமாக அமைக்கப்பட்ட கலையரங்கில் நடைபெற்ற முதற் சுற்றுப் போட்டியில் பெருமளவான மாணவ மாணவிகள் பங்குபற்றியிருந்தனர்.

அவர்களில் சிவசோதரன் வசீகரன், சோப்பாய், சங்கரநாதன்- ரதிசங்கர்- யாழ்ப்பாணம், செல்வராசன் சேந்தன் திருநெல்வேலி, இராசதுரை பேரின்பநாதன்- யாழ்ப்பாணம், கணேசன் சஜீவன் -கந்தர்மடம், இரத்தினசபாபதி வைத்திலிங்கம் -கழிபுரம் ஆகியோர் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான அரையிறுதிப் போட்டிகள் நாளை 3 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

(உ)

நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

கொழும்புத்தமிழ். ஓப்: 2

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி — இருபத்திரண்டாம் திருவிழாவான இன்று — ஆயர் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசையரங்கு:

மாலை 6—7 மணிவரை பிரணேஷ்வரி சிதம்பரப் பிள்ளை இசைக்கச்சேரி

மாலை 7 - 8-30 மணிவரை எஸ். நிவாதரனின் பேரன் - இசைக்கச்சேரி

நல்லை ஆதீனத்தில்

காலை 9-30 மணிக்கு சமய நிட்சை

காலை 2 மணிக்கு சமயப் பேருரை

மாலை 3மணிக்கு புராணப் படிப்பு

மாலை 4 மணிமுதல் ஆர். எம். நடராஜன்இசைக்கச்சேரி, இ. உமாராணி,நி. கிருபாகரன் இருவர் கூட்டு இசைக்கச்சேரி

இரவு 6—7 மணிவரை பிரசித்த பூஷணம் நடேசன் கிளாரன்மூர் மூர்த்தியின் சற்குரு பூஜை "அரியார் அடியோடு அந்தேவரையே" என்றதலைப்பில் இசைப் பேருரை

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயத்தில்

காலை 5-30 மணிக்கு சம்பூர்ணராமாயணம் தெய்வீக இசைப் பேருரை "ஆலய மேதம்" என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சர்மா

தித்திக்கும் முத்தமிழ் அரங்கில்

இரவு 8-30 மணி தொடக்கம் செஞ்சேரலைச் சிறுவர்கள் நடனம்.

"போர்க்களக் காண்டம்" இசை நாடகம், சற்றன்ன இசைக்குழுவின் இசையமுதம்

பாடநெறிகளிலும் மாற்றம் வரும்

கொழும்பு, செப்: 2

பாடசாலைகளின் பாடநெறிகள் மாற்றியமைக்கப்படவுள்ளன. மாணவரைப் பாதிக்காத வண்ணம் இம் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் நிச்சர்ட் பதிரான முன்னாள் தெரிவித்தார்.

பாடசாலைப் பாடநெறிகள் நவீன சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக மாற்றியமைக்கப்படும் என்றும் — அம்மாற்றங்கள் நியர் என்று மேற்கொள்ளப்படலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆட்சி கொண்டு வந்த பத்திரிகைகள் மீதான கட்டுப்பாட்டை நீக்குக!

சுதந்திர பத்திரிகையாளர் கோரிக்கை

கொழும்பு, செப். 3

கடந்த அரசாங்கம் பத்திரிகைகள் மீது விதித்த கடுமையான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்குமாறு சுதந்திர பத்திரிகையாளர் இயக்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பத்திரிகை தொடர்பு சாதனங்களை அரசு கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்தல் போன்றவற்றுக்கான நிர்வாகத்தை விரிவுபடுத்தப்பட்ட முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருதல் ஆகிய தேர்தல் கால உறுதிமொழிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்படியும் சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் அரசைக் கேட்டுள்ளது.

(ஐ-எ-6)

ஒன்று கூடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்' செப் 2

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல்தான சனிக்கிழமை நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒன்று கூடல் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்வோர் கவனத்தில் கொள்ள வேண்டிய விதிகள்

1. பதிவு மேற்கொள்ளல்

அ. மூலஆணவம் இருப்பின்

பதிவு செய்ய வேண்டிய ஊர்தியின் மூல ஆணத்தில் பதிவுக்கு வந்தவரின் பெயர் இருப்பின், முதலாம் படிவத்தில் ஊர்தி வகைகளுக்கு ஏற்ப பதிந்து பதிவுக்கட்டணம் அறவிடப்பட்டு தமிழீழ பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆ. மூல ஆவணம் இல்லாவிடின்

பதிவு செய்ய வேண்டிய ஊர்தியின் மூல ஆவணத்தில் பதிவுக்கு வந்தவரின் பெயர் இல்லாவிடின் தமிழீழத்தில் பதிவு செய்த ஒரு ஊர்தியின் உரிமையாளர் பிணையாளியாக இருத்தல் வேண்டும்;

குறிப்பு:

ஒரு ஊர்திக்கு ஒரு தடவை மட்டுமே தமிழீழ அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வூர்திக்கு மீண்டும் ஒரு தடவை தமிழீழ அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இ. வடபகுதிக்குள் முதன் முதலாக 19-01-1994க்கு பின் கொண்டுவரப்பட்ட ஊர்தியை பதிவு செய்ய வேண்டுமாயின் உள்நுழையும் சோதனை நிலையத்தினால் பரிசோதனை செய்யப்பட்டு வழங்கப்பட்ட விபரச் சான்றிதழையும், ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பித்து பதிவுசெய்து கொள்ளலாம்.

ஈ. வடபகுதிக்கு வெளியே இருந்து எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விற்பனை நோக்கத்திற்காக கொண்டு வந்தவர்களிடம் கொள்வனவு செய்யப்பட்ட ஊர்தியாயின் உள்நுழைந்த சோதனை நிலையத்தால் வழங்கிய சான்றிதழுடன் எந்த விற்பனையாளரிடம் கொள்வனவு செய்த ஊர்தி என்று உறுதிப்படுத்தும் பற்றுச் சீட்டும் இணைத்து ஊர்தியை பதிவு செய்து கொள்ளலாம்.

உ. ஊர்தி உரிமையாளர்கள் தமது குடும்ப அட்டையுடன் சமூகம் கொடுத்தல் வேண்டும். அக்குடும்ப அட்டையில் பதிவுக்குட்படுத்துபவரின் பெயர் பதியப்பட்டு இருத்தல் வேண்டும். இவை யாவும் சரியாக இருக்கும் பட்சத்தில் அதற்குரிய படிவத்தை பூரணப்படுத்தி தமது கையொப்பத்தையும் இட்டு அவ்வூர்திக்குரிய ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பித்து அவ் ஊர்தியை தமது பெயரில் பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவு செய்யப்படும் ஊர்தியை ஊர்திப் பரிசோதனையின் பரிசோதனைக்கு உட்படுத்தல் வேண்டும்.

ஊ. நிறுவனத்தின்பெயரில் பதிவு செய்யவேண்டுமாயின் நிறுவனத்தின் உயர் நிர்வாகிகள் இருவர் அதற்கான விண்ணப்பத்தில் தமது பதவி முத்திரை பதித்து கையொப்பம் இட வேண்டும்.

2. ஆண்டுவரி

வீதிகளில் பாவிக்கப்படும் எந்த ஒரு மோட்டார் ஊர்தியும் அவ்வாண்டுக்குரிய வரி அட்டை வைத்திருத்தல் வேண்டும், வீதிப்பரிசோதனையின் போது வரியட்டை பரிசோதனையின் பார்வைக்கு காண்பிக்கப்பட வேண்டும். ஊர்திகளில் முன்னும் பின்னும் அடையாள இலக்கங்கள் பொதுமக்களின் பார்வைக்கு தெளிவாகத் தெரியக் கூடியதாக குறிக்கப்பட்ட அளவில் மஞ்சள் நிறப் பின்னணியில் கறுப்பு நிறத்தால் எழுதிப் பொறித்திருத்தல் வேண்டும். முன்னர் அறிவிக்கப்பட்ட அளவுத்திட்டத்திற்கு அமையாக சமூகத்தில் அமைதல் வேண்டும். (முறிவு எழுத்துக்கள் தவிர்க்கப்படல் வேண்டும்)

3. உரிமை மாற்றம்

அ. ஒரு ஊர்தியை உரிமை மாற்றம் செய்வதாயின் அந்த ஊர்தியின் உரிமையாளர் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்கு சமூகம் தந்து 8ஆம் படிவத்தைப் பூரணப்படுத்தி அத்துடன் பதிவுச் சான்றிதழையும், வரி அட்டையையும் கையளித்தல் வேண்டும். அத்துடன் புதிய உரிமையாளர் 9ஆம் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி உரிமை மாற்றத்திற்கான கட்டணத்தையும், அவ்வாண்டுக்கான வரிக் கட்டணத்தையும் செலுத்தி ஊர்தியை பரிசோதனைக்குட்படுத்திய பின் புதிய உரிமையாளர் பதிவுச் சான்றிதழையும், வரி அட்டையையும் பெற்றுக் கொள்ளலாம். (பழைய உரிமையாளரும், புதிய உரிமையாளரும் தமது குடும்ப அட்டைகளைச் சமர்ப்பித்து தங்களை உறுதிப்படுத்தல் வேண்டும்).

ஆ. உரிமையாளர் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் வடபகுதிக்கு வெளியே சென்றிருந்தால் அக்குடும்பத்தில் உள்ள முதன்மை அங்கத்தவர் ஒருவர் உரிமை மாற்றம் செய்து கொள்ளலாம்.

இ. உரிமையாளர் இறந்திருந்தால் அவரது குடும்பத்தில் உள்ள முதன்மை அங்கத்தவர் ஒருவர் இறந்தவரின் மரணச்சான்றிதழுடன்[பிரதி/ அதன் போட்டோப் பிரதியுடனும்] (போட்டோப்பிரதி இருப்பின் தரப்படமாட்டாது) குடும்ப அட்டையையும் சமர்ப்பித்து உரிமை மாற்றம் செய்து கொள்ளலாம்.

(ஈ) பதிவுக்கு உட்படுத்திய ஊர்தியை உரிமை மாற்றம் செய்யாமல் விற்பனை செய்து விட்டு 01 - 08 - 94க்கு முன் வடபகுதிக்கு வெளியே உரிமையாளர்கள் சென்றிருப்பின் புதிய உரிமையாளர் அதற்கான ஒரு பிணையை வைப்பதன் மூலமே உரிமை மாற்றம் செய்து கொடுக்கப்படும்.

(4) பிணை நிற்பவர்களின் தகைமைகள்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளிற்கு அமையவே ஒருவர் பிணைநிற்கமுடியும்.

★ மோட்டார் லொறி உரிமையாளர் ஏனைய சரக்கு வாகனங்கள் வைத்திருப்பவர் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் 5ஆம் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி அதற்கான பதிவுக் கட்டணங்களைச் செலுத்தி பதிவு செய்திருத்தல் வேண்டும்.

7. பதிவு செய்யப்பட்ட ஊர்திகளின் இயற்கை மாற்றம், அடிச்சட்ட மாற்றம் செய்ய முன்னர் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தின் முன் அனுமதி பெற்றுக் கொண்டபின்னரே மாற்றம் செய்ய வேண்டும். அனுமதி பெற்று மாற்றப்பட்ட பின் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் ஊர்தியினை மீள் பரிசோதனைக்குட்படுத்தல் வேண்டும். அத்துடன் முன் அனுமதி பெறும்பொழுது எந்த இடத்தில் எவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட அடிச்சட்டம், இயந்திரம் என்ற விவரம் சமர்ப்பிக்க வேண்டும். இயந்திரம், அடிச்சட்டம் வெவ்வேறாக முன்னரே பதிவு செய்யப்பட்டிருப்பின் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தால் வழங்கிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. ஊர்திகளுக்கு நிறமாற்றம் செய்யும்போது தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுச் செயலகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

9. பதிவுச் சான்றிதழில் திருத்தங்கள் செய்ய வேண்டுமாயின் செயலகத்தில் குடும்ப அட்டையுடன் உரிமையாளர் வந்து திருத்தங்கள் செய்யலாம்.

10. மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஊர்திகளையோ அல்லது அடிச்சட்டம், இயந்திரம் என்பவற்றையோ முற்றாக அழிப்பதாயின், அவற்றிற்குரிய பதிவுகளை மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் இரத்துச் செய்த பின்னர், மோட்டார் ஊர்திப் பரிசோதகரின் முன்னிலையில் அழிக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கமைய ஊர்தி உரிமையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் வார நாட்களில் காலை 8-30 தொடக்கம் பி.ப 12-30 மணிவரையும், பி.ப 1-30 தொடக்கம் பி.ப. 3-30 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 8-30 தொடக்கம் பி.ப 1-00 மணி வரையும் தொடர்புகொள்ளலாம் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் மோட்டார் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு அறிவித்துள்ளார்.

தமிழீழ கைத்தொழில் விவசாய மேம்பாடுகளை-நல்லூர் பொருண்மியக் காட்சியில் பாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் குரல் வானொலியில்

02 — 09 — 1994

வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி — நாவல் அறிமுகம் "வானோரை சஞ்சிக்கையின் ஜூலை, ஒகஸ்ட் மாத இதழ்" — நிருபமா "வனம்", "கரும் புலி" — கவிதை

★ 8-25 — கணப்பொழுது

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — அரியக் அரசு "அருகிலிருப்பதால் அடியனிய வேண்டுமா?"

03 — 09 — 1994

சனி காலை

★ 7-03 — மாவீர வணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD. JAFFNA.

94 A/L

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பகல்நேர வகுப்பு

DAY CLASS
(பாடசாலை கல்வியை மாணவர்க்குரியது)

ஆரம்பம்: **09 - 09 - 94**
வெள்ளிக்கிழமை காலை 8-00மணி

(வி/8976)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் அனுசரணையுடன்

மாட்டு வண்டிச் சவாரிச் சங்கம்
நடத்தும்

மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி

இடம்: கந்தரோடை சவாரி மைதானம்
காலம்: **03 - 09 - 1994** சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 1 மணி

வெற்றி பெறும் 3 பிரிவுகளுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும்.

- மாட்டு வண்டிச் சங்கம்.

[7624]

யாழ். ஸ்ரீதர்
அகல வெண்திரையில்
தினசரி காலை 10-30 மணிக்கு
WAY OF THE DRAGON
(கராட்டி)
தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு
CIRCUS
உதைபந்தாட்ட ரசிகர்களுக்காக.....
சனி, ஞாயிறு பிற்பகல் 2-15 மணிக்கு
SCCCER WORLD CUP-1994
BRAZIL VS ITALY - FINAL
உலகக்கிண்ண உதைபந்தாட்டம்-1994
பிறேசில் எதிர் இத்தாலி—இறுதி ஆட்டம்
(சி/8979)

மரண அறிவித்தல்கள்

தம்பிப்பிள்ளை சங்கரப்பிள்ளை
(இளைப்பாறிய சிறாப்பர்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாக கொண்டவரும், பம்பலப்பிட்டி 6A, டெய்லி விலா அவனியுவவிலிருந்தவரும் கொண்டவருமான தம்பிப்பிள்ளை சங்கரப்பிள்ளை 31-8-94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், மகாதேவா (யாழ்ப்பாணம்), சுந்தரலிங்கம் (ஜேர்மனி), யோகேஸ்வரி, நந்தகுமார் (ஆசிரியர், இலிப்பத்தரவை மகா வித்தியாலயம்), சிவகுமார் (கனடா), வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம் (ஜேர்மனி), மனோரஞ்சிதம் (ஜேர்மனி), இராசையா, மங்களா ஆகியோரின் அன்பு மாமனாரும், மாணிக்கவாசகரின் அன்புச் சகோதரரும் ஆவார்

அன்னாரின் சமக்கிரியைகள் 1-9-94 என்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பில் நடைபெறுவன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
இ. கமலாதேவி
(மகள்)

182/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(32675)

காவிமுத்து சூசைப்பிள்ளை பாக்கியநாதர்

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சூசைப்பிள்ளை பாக்கியநாதர் காலமாகி விட்டார்.

இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் இளைப்பாறிய ஊழியரும், பிரேமினாவின் அன்புக் கணவரும், திருமதி நிரேசா (இத்தாலி), திருமதி றீற்றா (ஜேர்மனி), திருமதி ராணி (இத்தாலி), திருமதி கலெக்ஸ் சந்திரா (நகரசபை பருத்தித்துறை), செல்வி மாக்கிரட், செல்வி யோசப்பீன், செல்வி யோன்னீன் (இத்தாலி), செல்வி ஜசிந்தா (ஆசிரியர் றோ.க த.க. வித்தியாலயம் பண்டத்தரிப்பு), செல்வி ராஜினி (இத்தாலி), செல்வன் யேசுதாஸன் (ஜேர்மனி), காலம் சென்ற அன்ரனி செபமாலியம்பிள்ளை ஆகியோரின் அன்புமிகு தந்தையும் காலம் சென்ற ஸ்ரீ வீரசிங்ககுமார், திரு. யேசுராசா (ஜேர்மனி), திரு. மரியதாஸ் (இத்தாலி), திரு அன்ரன் குருநாதன் (பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலோஜினி, டினேஸ், டிமாஜி ஆகியோரின் அருமை பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (2-9-94) வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு பண்டத்தரிப்பு சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்
மார்க்கிரட் பாக்கியநாதர்,
(மகள்)

பற்றிமா கோயில் வீதி,
பண்டத்தரிப்பு.
(32665)

யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி அனைத்து சமய நிறுவனம் மகஜர்

பிரதமர் சந்திரிகாவிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு, செப். 2

பண்டித மாதம்பகம ஆஸ்ஜி நாயக்க தேரர் தலைமையான அனைத்துச் சமய சமாதான நிறுவனம் வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதை வலியுறுத்தி பிரதமர் சந்திரிகாவுக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமாயின் மூன்று அம்சங்களை அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ வடபகுதியில் வசிக்கும் சாதாரண மக்கள் எதிர்நோக்கும் இடர்க்கஷ்டங்களை நீக்குவதற்கும், அவர்கள் சாதாரண வாழ்க்கையை நடத்துவதற்கும் அவசியமான பொருளாதாரங்களை வழங்குதல்.

★ அப்பகுதி சாதாரண மக்கள், பாடசாலை மாணவர்கள் தொழில் புரிவோர் பயமின்றி வாழ்வதற்கு வசதி செய்தல். அரசியலமைப்பு சட்ட விரோதமான யுத்தத் தாக்குதல்களை தவிர்த்துக் கொள்ளுதல்.

★ வடபகுதி மக்கள் தென்பகுதிக்கும் தென்பகுதி மக்கள் வடபகுதி செல்வதற்கும் உள்ள தடைகளை நீக்குதல்.

நாள்தோறும் தடைவலயங்களை வாழ்ந்து மக்களை நேரிற் சந்தித்து, அங்குள்ள நிலைமைகளை அவதானித்து யதார்த்தங்களைப் புரிந்து கொண்டமையினாலேயே தாங்கள் இவ்வாறு அரசிடம் கோரவுள்ளதாகவும் ஆஸ்ஜி தேரர் பி. பிளிக்கு தெரிவித்தார்.

இக்கோரிக்கைகளை முற்றிலும் அரசிடம் சமர்ப்பித்தும் பயனேற்படவில்லை. புதிய பிரமர் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் உண்மையான ஆர்வம் கொண்டிருப்பதாக இம்மகஜரை புதிய அரசுக்கும் சமர்ப்பித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளதாக மகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்தார். (எ 6)

"கடலிலே காவியம் படைப்போம்"

ஒலிப்பதிவுநாடா நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 2

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் வெளியீடான விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய "கடலிலே காவியம் படைப்போம்" ஒலிப்பதிவு நாடா நேற்று மாலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

கடற்புலிகளின் மகளிர் படையணி தளபதி செல்வி. தனாயினி தலைமையில் யாழ் பல்கலைக்கழக கலைச் சதுக்க கலையரங்கில் இவ்வெளியீட்டு விழா நடைபெற்றது.

இந்த ஒலிப்பதிவு நாடாவை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்டு வைக்க, நாடாவின் முதல் பிரதியினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு இளங்குமரன், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தணைநின்று கடற்படையினரின் தாக்குதலில் காவடைந்த படகோட்டி கணேஸ் மாமாவின் தணைவியார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

முன்னதாக மங்கள விளக்கை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். நியாமம், தமிழீழ மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

வரவேற்புரையை கடற்புலிகளின் பொது நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவனும், வெளியீட்டுரையை கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. சி. சேரனாதனும் நிகழ்த்தினர்.

மதிப்பீட்டுரைகளை திரு. வீரமணி ஐயர், பேராசிரியர் திரு. ந. சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை ஆற்றினார். இறுதியில் இந்த ஒலிப்பதிவு நாடா வெளியிடுவதில் முன்நின்று உழைத்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-4)

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு:

மதிப்பீடு பற்றியகூட்டங்கள் இன்றும் நாளையும்

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வின் மதிப்பீடு திட்டமிட்டபடி எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பான, மதிப்பீட்டு நிலைய மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்ட கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும், அவர்களின் உதவியாளர்களுக்குமான கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் 10 மணிக்கு தமிழீழக் கல்விக் கழக சேட்பேர் கூடத்திலும்—

முதன்மைத்தேர்வாளர்கள், பிரதம தேர்வாளர்களுக்கான கூட்டம் நாளை (சனிக்கிழமை) முற்பகல் 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறவிருப்பதாக அலுவலரும் தவறாது சமுகம் தரும்படி தேர்வு ஆணையாளர் சேட்டுள்ளார். (எ)

விவசாய அமைச்சின்

ஆவணங்கள் எரிக்கப்பட்ட சம்பவம் பற்றி விசாரணை

அமைச்சர் உத்தரவு

பொதுத் தேர்தலின் கலடசிக் கட்டத்தில் விவசாய அமைச்சின் முக்கிய ஆவணங்கள் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பேராதனைப் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யும்படி அமைச்சின் செயலாளருக்கு விவசாய, காணி மற்றும் வனத்துறை அமைச்சர் டி. எம். ஜயரத்னா உத்தரவிட்டுள்ளார்.

பேராதனையில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்ததாகிய தொடர்பான ஆவணங்களே வாக்களிப்பு நிலைதுக்கு முன்பாக எரிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸாரின் விசாரணையில் இச்சம்பவம் தொடர்பாக மேலும் பல முக்கிய தகவல்கள் வெளியாகலாம் என்று அமைச்சர் ஜயரத்னா தெரிவித்தார். (—எ)

வெளிநாட்டு ஒப்பந்தங்கள்: மீள்பரிசீலனை செய்ய முடிவு

ஐ.தே.க. அரசு வெளிநாட்டு நிறுவனங்களுடன் செய்து கொண்ட பல கோடி ரூபா மதிப்புடைய பல ஒப்பந்தங்களை மீள்பரிசீலனை செய்யப் போவதாக புதிய அரசு நேற்று அறிவித்தது.

பல வெளிநாட்டு ஒப்பந்தங்கள் மூலம் முன்னைய அரசு நிறைச்சிலவைக் கொள்ளை அடித்தது என்றும் குற்றம் கூறப்பட்டிருக்கிறது.

கமார் ஐயாயிரம் கோடி ரூபா மதிப்புள்ள ஒப்பந்தங்கள் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனாநாயக்கா தெரிவித்தார்.

ஆயுதக்கொள்வனவு தொடர்பாக ரஷ்யாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே

—அரசியல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்குத் தாம் விரும்புவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பாதுகாப்பு அமைச்சு செயலாளர் [illegible] ஆகியோரும் தற்காலிக [illegible] கலந்து கொண்டனர். (இ-எ-5)

ஜெயலலிதா பயணம் செய்ய குட்டி விமானம்

தமிழ்நாடு முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதா பயணம் செய்வதற்காக ரூபா 18 கோடிக்கு நவீன குட்டி விமானம் ஒன்றை தமிழக அரசு கொள்வனவு செய்யவுள்ளது. (எ)

சந்திரசேகரன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகள்

★ மைத்திரிபால சிறிசேன — நீர்ப்பாசனம்

★ மிலிந்த ரோய் பெரேரா — கடற்றொழில், நீரியல் வள அபிவிருத்தி

★ எஸ். எஸ். எம். அபுபக்கர் — விஞ்ஞானம், தொழிநுட்பம், மனித வள அபிவிருத்தி

★ பேர்ட்டி திஸாநாயக்கா — வர்த்தொழில் அபிவிருத்தி

★ எஸ். பி. நாவின்ன — வீடமைப்பு, நிர்மாணத்துறை, சொத்துவசதிகள்

★ அலவி மௌலானா — தகவல் துறை

★ ஜீவன் குமாரதுங்க — இளைஞர் விவகார, விளையாட்டு, கிராமிய அபிவிருத்தி

★ சந்திரசிறி கஜதீர — உள்நாட்டு / அலுவல்கள், மாகாண சபைகள், கூட்டுறவுத்துறை

★ செ. சந்திரசேகரம் — வர்த்தகம், வாணிபம், உணவு

★ அத்துல நிமலசிறி ஜயசிங்க — மின்சக்தி, எரிபொருள்துறை

★ திருமதி நிருபமா ராஜபக்ஷ — சுற்றுலா, விமானப் போக்குவரத்து

★ திருமதி பவித்ரா வன்னியாராச்சி — சுகாதாரம், சமூகசேவைகள்

★ பேராசிரியர் லிஸ்வலர்ண பரன — கல்வி, உயர்கல்வி

★ பேராசிரியர் ஏ. வி. கரவீர — கலாசாரம் மதவிவகாரம். (ஜ-எ)

பொருண்மியக் கலை நிகழ்வில் இன்று

நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தினரால் நடத்தப்படும் கலை நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை 5.30 மணிக்கு தமிழ் முத்தினை தெரிந்து கொள்ளுங்கள் வினாவிடைப் போட்டியின் 6 ஆவது அமர்வு, பொருண்மியம் எனும் சிந்து நடைக்கூத்து, நவீன பொம்மலாட்ட நிகழ்வு, வீடியோ குறும்படக் காட்சி என்பன நடைபெறவுள்ளன. (எ)

கல்வித்துறை கல்லூரிகளுக்கு மேலும் மாணவர்கள்

கொழும்பு, செப். 2

கல்வித்துறைக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவரின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வி உயர்கல்வி ஆலோசகர் றிச்சார்ட் பதிரானா இது தொடர்பாக இத்தகைய கல்லூரிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஜ-எ)

அமைச்சு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குணசேகர புதிய செயலாளராக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் பி. பி. ஜி. கிங்ஸ்லி சேவைக்குத் தெரிவித்தார். (ஒ-எ-6)

SPOKEN ENGLISH
BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
03 - 09 - 1994
(காலை 9 மணி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்
பதவி வெற்றிடம்

கணக்காளர் பதவி:
165/88-104-10

மேற்குறிப்பிட்ட பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களைச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத் திட்ட கணக்குப் பதிவாளர்/கணக்கு அல்லது கணக்காய்வு விதிகள் பதவியில் புறைந்தது வேட அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது தரத்தில் மேற்குறிப்பிட்ட பதவியில் 6 வருட அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராட்சிய கணக்குப் பதிவாளர் நிறுவனத்தில் [Institute of Book Keepers] இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்காய்வு துறையில் மேற்பார்வை மட்டத்தில் 2 வருட அனுபவம், அல்லது ஐக்கிய இராட்சிய கணக்குப் பதிவாளர் நிறுவனத்தில் (Institute of Book Keepers) இடை நிலைப் பரீட்சையில் சித்தியெய்தி இருப்பதுடன் குறித்த பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் (உயர் தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் கணக்கியலை உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்காய்வு துறையில் மேற்பார்வை மட்டத்தில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஈ. பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆடு செவுமுகாமை கணக்காளர் நிறுவன பதர்ச்சி சித்திச் சட்டம் 1 அல்லது இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காளர்/உள்ளக கணக்குப் பரிசோதனைப் பதவி ஒன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

சம்பளத்திட்டம்:
1305 — 2005
40 X 5 — 50 X 10
இதுடன் இதர படிகளும் வழங்கப்படும்.

வயது:
25 — 40 வரை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

பிணை:
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப்பிரமாணத்திற்கு அமையவும் நெறியாள் குழு தீர்மானத்திற்கு அமையவும் செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் கல்வி, பிறப்பு, நற்சான்றுப்பத்திரங்களின் பிரதியுடன் 21 - 09 - 1994 அன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக தலைவர், யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம், இருபாலை வீதி கோண்டாவில் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் முகமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

- தலைவர்.

யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்
இருபாலை வீதி, கோண்டாவில்.
31 - 08 - 1994
(சி-8978)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிடெடினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 192/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02 - 09 - 1994 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org